**இலங்கை பத்திரிகை பேரவை – 2017**

---

இலங்கை பத்திரிகை பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், 2011 இலிருந்து 2014 வரையான ஆண்டுகளிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்கள் தொடர்பான அரசாங்க மாணியத்திற்கான காலக்கழிவு செய்யப்படாத ரூபா 1,528,669 ஆன ஒரு திரண்ட தொகைக்கான கணக்கீடானது மீளாய்வாண்டு காலத்தில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட போது, அது உரிமை மாற்றல் கூற்றில் மற்றும் 2015 திசெம்பர் 31 உள்ளவாறான திரண்ட மிகையிலும் முன்னைய ஆண்டு வழுக்களை சீராக்குதலுக்கமைய திருத்தப்பட்டிருந்தது. எனினும், நியமத்தின் 54 ஆம் பந்தியில் வேண்டப்பட்டதன்படி, முன்னைய ஆண்டு வழுக்களின் தன்மை மற்றும் வரிசை உறுப்படிகளில் சீராக்கப்பட வேண்டிய தொகைகள் போன்றவைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், கிரயம் அல்லது நிகர தேரத்தக்கப்பெறுமதி களில் குறைவான பெறுமதியில் கையிருப்பு மதிப்பிடப்பட வேண்டும். எனினும், ரூபா 205,213 பெறுமதியான பழைய புத்தகங்களை மதிப்பிடுவதற்கு இந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் கிடைக்கப்பெறாமை

ரூபா 242,780 பெறுமதியான இறுதி இருப்புக்களை உள்ளடக்கிய எழுது கருவிகளுக்கான இற்றைப்படுத்தப்பட்ட கையிருப்புப் பதிவேடு மற்றும் ரூபா 211,913 பெறுமதியான நூலக புத்தக்கள் தொடர்புடைய கொள்முதல் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 102 தொடக்கம் 105 வரை | கணிப்பொறி, மேசைக்கத்திகள் போன்ற பொருட்கள் தொலைந்துவிட்டதாக வருடாந்த அளவைச் சபை அறிக்கையில் அடையாளப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இவை தொடர்பில் இந்நிதிப் பிரமாணத்தினால் குறித்துறைக்கப்பட்டதன்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 880 | அரச உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்திற்கு இணங்க அரசாங்கத்தின் பணத்தைக் கையேற்றல் அல்லது அப்பொறுப்பில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள், அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள், பிணைப்பணம் வைக்கவேண்டியிருந்த போதிலும் பேரவையில் அவ்வாறான கடமைகளில் ஈடுபடுகின்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து கணக்காய்வுச் செய்யப்பட்ட திகதி 2018 மே 31 வரையிலும் பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 506,418 மிகை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 480,595 ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 25,823 தொகையான முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றுது. மீளாய்வாண்டில் பேரவையின் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 1,022,884 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரசின் பங்களிப்பு ரூபா 1,089,000 இனால் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிப்பற்றாக்குறை காணப்பட்டதுடன் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் மிகையொன்று காணப்பட்டது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னரான 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,511,489 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 12,750,053 ஆக அல்லது 2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயலாற்றலும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போலியான, அவமரியாதைக்குரிய மற்றும் நெறியற்ற கூற்றுக்கள் தொடர்பாக தேடிக் கண்டறிந்து குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கான அதிகாரத்தை பேரவை கொண்டிருந்த போதிலும், அவ்வாறான நடவடிக்கைகள் பேரவையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி சகல பத்திரிகைகளும் பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி அதிகாரம் காணப்பட்ட போதிலும், இது தொடர்பான விதிமுறைகளை பேரவை தயாரித்திருக்கவில்லை. பதிவு செய்யப்படவேண்டிய பத்திரிகைகளின் எண்ணிக்கை 300 ஆக பேரவை மதிப்பீடு செய்திருந்த போதிலும், 2016 மற்றும் 2017 களில் பதிவுச் செய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை முறையே 230 மற்றும் 199 ஆக காணப்பட்டது. எனினும், பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பான ஆய்வு பேரவையினால் செய்யப்பட்டிருக்வில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது செய்தித்தாள்களுக்கு எதிராக பொது மக்கள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களிடமிருந்து பேரவைக்கு 49 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாதிருந்த 52 முறைப்பாடுகளுடன் தீர்க்கப்படாதிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 101 ஆகும். இதில் 35 முறைப்பாடுகளுக்கு ஆண்டின் இறுதிவரையிலும் தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. தீர்க்கப்படாதிருந்த 35 முறைப்பாடுகளில் 16 முறைப்பாடுகள் ஒன்று தொடக்கம் 4 வரையான ஆண்டுகள் தாமதமடைந்து காணப்பட்டது.

(உ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பேரவையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கேற்ப அதில் உள்ளடக்கப்பட்டிருந்த பத்திரிகையாளர்களின் மொழித்திறமையை விருத்தி செய்வதற்கான சான்றிதழ் பாடநெறி நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நடத்தப்பட்ட 04 நிகழ்ச்சிகள் தொடர்பில் 19 தொடக்கம் 44 சதவீதம் வரையில் இலக்குகள் அடையப்பெற்றிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) பிராந்திய பத்திரிகையாளர் மற்றும் வெகுஜன ஊடக பாடசாலைகள் போன்றவ்றில் 14 செயலமர்வுகளை நடத்தும் நோக்கில் திறைசேரியிடமிருந்து ரூபா 2,710,000 ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 2,134,000 செலவில் 12 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டிருந்தது.

(iv) சார்க் பிராந்திய நாடுகளின் பத்திரிகையாளர்களுக்கான மாநாடு 2016 ஆண்டிலும் திட்டமிடப்பட்டு ரூபா 2,500,000 ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு கற்கைக்காகவும் ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காகவும் ரூபா 200,000 தொகையொன்று 2015 நவம்பர் 24 இல் களணி பல்கலைக்கழகத்தின் வெகுஜன ஊடகத்துறைப் பிரிவிற்கு செலுத்தப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவு செய்து ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை பேரவைக்குச் சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் முன்னைய ஆண்டு காலத்தில் விற்பனைக்காக 2401 எண்ணிக்கையான வெகுஜன ஊடக விடயங்கள் பற்றிய புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி காலத்திலும் ரூபா 271,758 பெறுமதியான இருப்புக்கள் தொடர்ந்திருந்தது. குறைந்த விற்பனை காரனமாக இலவசமாக இந்தப் புத்தகங்களை வழங்குவது பேரவையின் நடைமுறையாக இருந்தது.

(இ) 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் அந்நிறுவனங்களுக்கான் பிரசைகள்/ சேவைப் பெறுநர் பட்டயத்தை அறிமுகப்படுத்த வேண்டிய போதிலும், பேரவை அதுபற்றி விழிப்புணர்வடைந்திருக்கவோ அல்லது இவ் ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைளையோ எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று மாத காலப்பகுதிக்குள் தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரையும் பேரவை நியமித்திருக்காததுடன் தகவல் அலுவலராக புத்திரிகை ஆணையாளர் பதில் கடமையாற்றியிருந்தார்.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இரண்டு நிதியக் கணக்குகளுக்காக 1993 நவொம்பர் 05 மற்றும் 2009 செப்தெம்பர் 07 திகதிகளில் முறையே ஆய்வு நிதியம் மற்றும் கடன் நிதியம் என பெயரிடப்பட்டு திறக்கப்பட்டதும் மீளாய்வாண்டு காலத்தின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 2,540,636 மற்றும் ரூபா 1,601,416 மீதிகளைக் கொண்டதுமான இரண்டு வங்கி கணக்குகள் பேரவையால் பராமரிக்கப்பட்டுள்ளது. இந் நிதியக்கணக்குகளை பராமரிப்பதற்கு பொதுப்பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினது அனுமதிக்காக 2017 திசெம்பர் 19 திகதிய எவ்ஜஎன்/பிஈஎன்/168 இலக்க கடிதத்தினால் கோரப்பட்டிருந்த போதிலும், அவ் அனுமதி 2018 ஏப்ரல் 25 திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

உதவி பத்திரிகை ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், மற்றும் அலுவலக சிற்றூழியர் போன்ற மூன்று பதவிகளுக்கான 04 வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் பேரவையின் அதிகாரங்கள் மற்றும் ஊழியர் நிர்வாகம் போன்றவற்றை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் காணப்பட்டன.

## 5. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

2030 ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி இலக்குகள் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்க ஒவ்வொரு பகிரங்க நிறுவனமும் செயற்படல் வேண்டும் என்பதுடன் பேரவையும் மீளாய்வாண்டிற்கான செயற்பரப்பின் கீழ் பேரவையின் இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் செயற்படல் வேண்டும் என விழிப்புணர்வு அடைந்திருந்நது.

(அ) மேற்படி 2030 ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் பற்றி பேரவை விழிப்பணர்வு அடைந்திருந்த போதிலும் அது தனது செயற்பரப்பின் கீழுள்ள அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.ஆகவே இலக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் இலக்குகளை அடைந்து கொள்ளுதல் தொடர்பான மைல்கற்கள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்கான குறிகாட்டிகள் என்பவற்றை இணங்காண்பதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும், செயல் நடவடிக்கை திட்ட ஏற்பாடுகளுக்கு ஒதுக்குதல், தேவைப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை இனங்காணுதல், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை அடைவதில் அக்கறையுடைய தரப்பினரை இனங்காணுதல் போன்றவை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாண இலக்கம் 133 மற்றும் 134 இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி பேரவையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வு குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று வீதம் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு காலத்தில் இரு குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 12 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை குறிப்பிடத்க்க முரண்களும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 06 சதவீதம் முதல் 24 சதவீதம் வரை குறிப்பிடத்க்க முரண்களும அவதானிக்கப்பட்டமை, பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவை தொடர்பாக 2014 யூலை 24 இல் பொது முயற்சிகள் குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வை அமுல்படுத்துதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்தல், கிரமமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் பேரவையில் வெற்றிடமாகியுள்ள நிறைவேற்று பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மே 14 ஆம் திகதிய ஜனாதிபதி செயலக காரியாலய கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 ஜுலை 10 இன் பொது முயற்சிகள் குழுவின் 07 ஆவது நெறிப்படுத்தல் என்பவற்றில் வலியுறுத்தப்பட்டிருந்ததன்படி பேரவை தனது செயற்பாட்டை அரச கட்டிடத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். எனினும் பேரவை தொடக்க காலத்தில் இருந்து 40 வருட தனியார் வாடகை கட்டிடங்களில் தனது செயற்பாட்டை மேற்கொள்கின்றது. 2006 இல் இருந்து 2017 வரை ரூபா 18,806,500 கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. அரச கட்டிடமொன்றை கொள்முதல் செய்வதில் உள்ள பின்னடைவினால் இச்சூழ்நிலை உருவாகியுள்ளது என பேரவையின் தலைவர் கணக்காய்வுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

## 6.5 சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

1981 ஒக்டோபர் 14 இல் 162/05வீ இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின்படி, தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பிலான பத்திரிகையாளர்களை நெறிமுறைக் கோவையுடன் இணங்கியொழுகுவதனை புலனாய்வு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றது. எனினும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான புலனாய்வு அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அப்புலனாய்வு அறிக்கைகள் ஒழுக்க நெறி நடத்தை தொடர்பாக உள்ளடக்கியிருந்த போதிலும் இவை தொடர்பில் தொடர்ச்சியாக செயற்பாடுகள் எடுப்பதற்கு பணிப்பாளர் சபை நியாயமான கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பேரவையின் குறிக்கோள்களை அடைதல் | (i) | பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போலியான, அவமரியாதைக்குரிய மற்றும் நெறியற்றவைகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை |
| | | (ii) | சந்தையிலுள்ள பத்திரிகைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை |
| | | (iii) | தினசரி பத்திரிகைகான புலனாய்வு நடத்தப்படாமை |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | | அனுமதிக்கப்பட்ட பதவிகள் வெற்றிடங்களாக இருத்தல். |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | | ஒரு உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்காமை. |